புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# இசுலாமியர் வாழ்வியல் முறைகள்
# (இசுலாமியப் புதினங்களை முன்வைத்து)

முனைவர் செ.ஆமினா பானு,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை(சுயநிதிப்பிரிவு),
சதக்கத்துல்லா அப்பா கல்லூரி,
ரஹ்மத் நகர், திருநெல்வேலி-11.

ஆய்வுச்சுருக்கம்

புனைவு என்பது ஒரு படைப்பாசிரியரின் சமூக உற்றுநோக்கல்,நேரடி அனுபவம் இவற்றிலிருந்து புதிதாக ஒன்றைக் கற்பனை கலந்து படைப்பது என்பதில் உருவாகிறது. அதாவது, புனைவு என்பது வாழ்க்கையைக் கலைப்படைப்பாக மாற்றுவதாகிறது. இந்த வரையறைகளின் அடிப்படையில் உருவாக்கப்படும் இலக்கியமே புனைவிலக்கியம். இதில் இசுலாமியப் பின்னணியில் உருவான புனைவிலக்கியங்களில் ஒன்றான புதினங்களில் வாழ்வியல் முறைகளை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச் சொற்கள்

புதினம் – இசுலாமியச் சமயம் – இசுலாமியப் புதினங்கள் - வாழ்வியல் முறைகள் – இசுலாமியர்களின் புற அடையாளங்கள் – பர்தா – தாடி - தொப்பி

## தொடக்கமாக

தமிழ்ச்சமூக வாழ்க்கையை அதன் சகலவிதமானப் போக்குகளுடனும் காட்டுவதாலேயே புதினங்கள் ஆவணப்பதிவுகளாகின்றன. இப்புதினங்களைக் கற்பதற்கும், புரிந்துகொண்டு சுவைப்பதற்கும் சமூகவியல், வரலாறு, அரசியல், பண்பாடு, உளவியல், மானிடவியல் போன்ற பிறதுறைக் கல்வி இன்றியமையாததுவாகிறது. இந்தப் பின்னணியில்தான் பல்துறைக் கல்விச்சிந்தனைகளுக்கும் உரிய நிலைக்களன்களாகப் புதினங்கள் விளங்கிவருகின்றன. அவ்வகையில் ஒரு குறிப்பிட்டச் சமூகத்திற்கான வாழ்வில் முறைகளை அறிவதற்குரிய இலக்கிய வடிவமாகச் சமகாலப் புதினங்களை இனங்காணமுடியும். இதனடிப்படையில் நவீன இசுலாமியப் புதினங்களையும் கருத்தில் கொள்ளலாம். இசுலாமிய உலகம் ஒரேவிதமான வாழ்க்கை முறைகளையும், பழக்கவழக்கங்களையும் கொண்டமையாமல் ராவுத்தர், லெப்பை, பட்டாணி, ஒசா, மரைக்காயன், அர்ஷால், அஷ்ரப், நவ்முஸ்லீம், மீன்காரன் போன்ற மதமாற்றப் பிரிவுகளாய் திகழ்ந்துவருகிறது. இசுலாமியர்கள் மற்றயச் சமய சமூகங்களைப் போலவே அவர்கள் வாழும் நிலம்சார்ந்தே தமது வாழ்வியலை முன்னெடுத்துச் செல்கின்றனர். இருப்பினும் இச்சமயம் சார்ந்த சமூக மக்களது வாழ்க்கையின் அடிப்படையாக இசுலாமிய மார்க்கமும் பண்புகளும் அமைந்துள்ளன. இவ்வகையில் இசுலாமியர்களின் வாழ்வியல் முறைகளை வட்டாரம் சார்ந்து வெளிப்படுத்தியுள்ளப் புதினங்களான, துருக்கித்தொப்பி, இரண்டாம் ஜாமங்களின் கதை, அப்பாஸ்பாய் தோப்பு, ஆகிய படைப்பாக்கங்கள்வழி இசுலாமியர்களின் வாழ்வியல் முறைகளில் வட்டாரம் சார்ந்த தனித்தன்மைகள், சமயம் சார்ந்தப் பொதுத்தன்மைகள் உள்ளிட்டன குறித்து ''புதினங்களில் இசுலாமியர் வாழ்வியல் முறைகள்'' என்ற தலைப்பில் ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

இசுலாமியப் புனைவிலக்கியங்கள்

தொடக்ககால இசுலாமியத் தமிழிலக்கியங்கள் அனைத்தும் திருக்குர்ஆன், இறைத்தூதர், இறைநேசர்களை மையப்படுத்தியே படைப்பாக்கம் பெற்றுள்ளன. இவ்விலக்கியங்கள் இசுலாமிய மக்களுக்கு வாழ்வியல் நெறியை உணர்த்துவதாகவும் மாற்றுச்சமயத்தவர்க்கு இசுலாமியச் சமயக்கொள்கைகளை அறிவுறுத்துவதாகவுமே இருந்துள்ளன. இதனைத்தொடர்ந்து பொது இலக்கியப் போக்குகளுக்கு ஏற்ப இசுலாமிய இலக்கியப் பொருண்மைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளன. இதன்கீழ் சமயக் கோட்பாடுகளின் அடிப்படையில் தங்களது வாழ்வியலை அமைத்துக் கொண்டுள்ள இசுலாமியர்களை மையப்படுத்தியச் சிறுகதை, புதினம், நாடகம் போன்ற இலக்கிய வடிவங்கள் வெளிவரத் தொடங்கின. இவ்வகை இலக்கியப் படைப்புகள் பெரும்பான்மையும் இசுலாமியப் பத்திரிக்கைகளிலே வெளிவந்துள்ளன. புதின வரலாற்றைப் பொறுத்த அளவில் கி.பி.1885-இல் வெளிவந்துள்ள “அசன்பே சரித்திரம்” எனும் புதினத்தில் இருந்துதான் இசுலாமியத் தமிழ்ப் புதின வரலாறு தொடக்கம் பெறுகிறது. ஒரு நூற்றாண்டு கால வரலாற்றுப் பின்புலத்தை இசுலாமியப் புதினங்கள் பெற்றிருந்தும் பொது இலக்கியத்தளத்தில் அதன் வீச்சு அறியப்படவில்லை.

நவீன இலக்கியம் குறித்து, ”பண்டைக்கால இலக்கியங்கள் விழுமியங்களின் அடிப்படையில் அவற்றை உரைகல்லாகக் கொண்டு வாழ்க்கையைச் சித்தரித்தன. நவீன படைப்புக்கள் கால ஒழுங்கையும் ஓட்டத்தையும் ஆதாரமாய்க் கொண்டு வாழ்க்கையை விளக்க முற்படுகின்றன” [1] என்கிற ஈ.எம்.பாஸ்டர் என்பவரின் கூற்றானது இசுலாமிய இலக்கிய வரலாற்றிற்கும் பொருந்துவதாக அமைந்துள்ளன. காலங்காலமாகச் சமயங்களின் வழிவந்த இலக்கியநெறி இருபதாம் நூற்றாண்டிலே சமுதாய வழி நிற்கிறது. எனவே தமிழ்ப்புதினங்களின் வளர்ச்சியை ஒட்டியதாகவே இசுலாமியப் புதினங்களின் வளர்ச்சியும் அமைகின்றன.

வாழ்வியல் முறைகள்

வரையறுக்கப்பட்டச் சமூகத்தில் வாழும் மக்களின் வாழ்வியல் நகர்வுகளின் வெளிப்பாடே பண்பாடாகிறது. வாழ்வியல் நகர்வு என்பது அச்சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், கலைகள், இலக்கியங்கள் முதலியவற்றால் கட்டமைக்கப்படுவதாகும். ஓர் இனத்தின் பண்பாடு பெரும்பாலும் அந்த இனம் பின்பற்றும் சமயநெறியின் பிரதிபலிப்பாய் அமையும். இக்கருத்தாக்கங்களின் அடிப்படையில் இசுலாத்தின் சமயச் சமூகப் பின்புலத்தில் படைப்பாக்கம் பெற்றிருக்கும் புனைவிலக்கியங்களான துருக்கித்தொப்பி, அப்பாஸ்பாய் தோப்பு, இரண்டாம் ஜாமங்களின் கதை, என்பவற்றினூடாகச் சித்தரிப்பிற்குள்ளாகியிருக்கும் இசுலாமிய மக்களின் வாழ்நிலைக் குறித்த ஆய்வை இவ்வியல் மேற்கொள்கின்றது.

இசுலாமியர்களின் புற அடையாளங்கள்

இந்திய, தமிழ்ச்சூழல்களில் இசுலாம், இசுலாமியர் பற்றிய அதீதப்புனைவுகள் வரலாறு தொட்டு வாழ்வுத்தளம் வரை கட்டமைக்கப்பட்டு வருகின்றன. ஆரியர் வருகை, ஐரோப்பியர் வருகை என்று வரையறுக்கப்பட்ட வரலாறு “இஸ்லாம் ஆக்கிரமிப்பு” என்றே சொல்லாடலை முன்வைக்கிறது. காட்டு மிராண்டிகள், அசுத்தாமானவர்கள், இழிவானவர்கள் என்று பொருள்படும் ”மிலேச்சர்” என்ற சொல்லே இசுலாமியர் பற்றிய இசுலாமியர் அல்லாதாரின் சொல்லடையாளமாகியது. “துருக்கியர்” என்பது ”துலுக்கன்” என்று மருவியது. ஏளனமும், கீழ்மைப்படுத்திப் பார்த்தலுமே மருவியச் சொல்லின் தொனிப்பொருளாகியது. இத்தகையச் சொல்லாடல்களுக்குள் ஒடுக்கப்படும் இசுலாமியர்களின் வாழ்வியல் சார்ந்த அடையாளங்களானத் தாடி, கைலி, பச்சைநிற பெல்ட் போன்றவை பழையத் தமிழ்த்திரைப்பட வில்லன்களின் ஆடை அலங்காரமாக மாறி தமிழர்களின் உளவியலைத் தகவமைத்துக் கொண்டது. இசுலாமியர் தவிர பிறரின் இரவுநேர உடையாகக் கைலி ஆடை இடம்பெற்றது. பொது இடங்களில் கைலி ஆடையை உடுத்துவோர் மீது கீழ்த்தரமானச் சமூக மதிப்பீடுகள் உருவாக்கப்பட்டன. எனவே ஒட்டுமொத்தச் சமூக மக்களும் தாங்கள் பின்பற்றக்கூடியச் சமயப் பின்னணியில் தனித்த அடையாளங்களைப் பெற்றுள்ளனர். அம்மக்களின் தோற்றத்தை வைத்தே அவர்கள் சார்ந்திருக்கும் சமயம் அடையாளப்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து தி.சு.நடராசன், ”சுல்தான்கள் ஆட்சிக்காலத்திலும் பின்னர் நாயக்கர் கால ஆட்சிக்காலத்திலும் அரசு அதிகார வசதிகளோடு இங்கே வந்து குடியமர்ந்த (பெரும்பாலும் உருது பேசுகிற) இசுலாமியர்களும் அதன்பின் அவர்கள் வந்த இடத்தில் இங்கே இசுலாமிய சமயத்துக்கு

*மதமாற்றம் செய்து கொண்டவர்களும், அல்லது செய்யப்பட்டவர்களும் உடலிலும் உடையிலும் செய்து கொண்ட லுங்கி, தொப்பி, செதுக்கப்பட்ட தாடி, பர்தா, முக்காடு முதலிய மாற்றங்கள் மற்றும் தொழுகைமுறைகள் முதலிய வித்தியாசமான நடப்புக்கள் மூலம் புதிய அடையாளங்களைக் கொண்டுவந்தனர்''[2] என்று எடுத்துரைக்கும் செய்திகளினூடாக இசுலாமியர்களின் அடையாளமாக லுங்கி, தொப்பி, தாடி, பர்தா, முக்காடு போன்றவை திகழ்வதை அறியமுடிகிறது. இதிலிருந்து, ஆண்கள் அணியும் அரைக்கால் அல்லது முழுக்கால் சட்டை 18-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தமிழ் நாட்டில் பெருவாரியான மக்களால் அறியப்படாதவையாகும். ஆங்கிலேயரும் நவாவுப் படையினர் எனப்படும் வடநாட்டு இசுலாமியர்களும் வந்த பின்னரே உடம்பின் மேற்பகுதியில் ''தைத்த சட்டை'' அணியும் வழக்கம் தமிழ்நாட்டில் புகுந்துள்ளது என்பதையும் அறியமுடிகிறது.*

*பர்தா*

*தந்தைவழிச் சமூகங்களில் ஆண்களால் முன்னெடுக்கப்படும் அதிகாரத்தின் வழி பெண்கள் மீதானப் பாலியல் உரிமம் பெறப்படுகிறது. இவ்வகைச் சமூக அமைப்பில் பெண், திருமணத்திற்கு முன் கன்னித்தன்மையுடனும், திருமணத்திற்குப் பின் கற்புடனும் வாழ்வது போற்றப்படுகிறது. இச்சமூக அமைப்பே பலதரப்பட்டச் சமயங்களின் கொள்கையாகவும் பின்பற்றப்படுகிறது. இதன்வழிப்பட்டு பெண்களைத் தனிமைப்படுத்தல், திரைஇடுதல் போன்ற வழக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுகுறித்து அ.மார்க்ஸ், ''பெண்கள் திரையிட்டுத் தம்மை ஆண்களிடமிருந்து மறைத்துக்கொள்ள வேண்டும் என்றோ வீட்டில் பிறர்பார்வையில் படாமல் தனியே முடங்கிக் கிடக்க வேண்டும் என்றோ திருக்குர்ஆன் விதிக்கவில்லை. பாரசீக மற்றும் பைசாண்டிய வழக்கமான இது இஸ்லாமின் வளர்ச்சிக் கட்டத்தில் அத்துடன் இணைந்து கொண்ட ஒன்று''[3] எனும் கூற்றானது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இசுலாமியப் பெண்களால் அணியப்படும் ஆடையான ''பர்தா'' முறை இசுலாமியச் சமயக்கொள்கைகளில் வலியுறுத்தப்படவில்லை. இவ்வழக்கம் இசுலாம் பரவுவதற்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே பல நாடுகளில் இருந்துள்ளது. இசுலாம் இத்தகைய நாடுகளில் பரவும்போது கொள்வன கொடுப்பன முறைகளில் இசுலாத்திற்குள் அனுமதிக்கப்பட்டதுதான் பெண்களுக்கான ஒழுக்க அடையாளமாகக் கருதப்படும் பர்தாவாகும்.*

*இதனை, ''பர்தா என்ற ஃபார்ஸிச் சொல்லின் பொருள் திரை என்பதாகும். பெண்களைத் திரைமறைவில் வைத்துப் பேணிப் பாதுகாக்கும் வழக்கம் 5000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பாபிலோனியாவிலும், ஈரான், பாலஸ்தீனம், பார்த்தியா, ரோமப் பேரரசு, ருமேனியா, எகிப்து, ஈராக், அஸ்ஸீரியா, அரேபியா போன்ற நாடுகளில் வழக்கத்தில் இருந்ததோடு பர்தா முறையைப் பேணாத பெண்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்படும் பழக்கம் புராதன அஸ்ஸீரிய நாட்டில் இருந்து வந்துள்ளதாக வரலாறு கூறுகிறது… அண்ணல் நபி(ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே யுத சமூகப் பெண்கள் தங்களின் உடலை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை மூடி மறைத்துக் கொண்டு வெளியில் நடமாடி வந்தனர்''[4] என்று இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் எடுத்துரைக்கும் செய்தியானது பர்தாவின் தோற்றப் பின்னணியைப் புலப்படுத்துகிறது. இதிலிருந்து, இசுலாமியர்கள் தங்களைத் தனித்துவப்படுத்திக்கொள்ளும் பண்பாட்டு அடையாளமாக பர்தா அணிதலை முன்னெடுத்திருந்தாலும் அதன் பின்னணியில் பெண்ணின் உடலைத் தனது உடைமையாக்கி அதனைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அவள்மீது ஆண் தன் அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்ளும் சமூக யதார்த்தமே நிலவுகிறது. தமிழ்நாட்டிலும் பர்தாமுறை(திரை இடுதல்) இருந்துள்ளதற்கானச் சான்றுகள் சங்க இலக்கண, இலக்கியங்கள், புராணங்களில் இடம்பெற்றுள்ளன. இதனை, ''முக்காடிடுதல, கண்ணேறு போக்கும் ஒரு பாதுகாப்பு ஆகும். பாலுணர்வு காரணமாக எழும் பொறாமையை இது தவிர்க்கிறது. முஸ்லீம்களின் பர்தா முறையின் தோற்றத்திற்கும் இது காரணமாகும். முஸ்லீம்களிடமிருந்து இந்துக்கள் இதனை கற்றுக்கொண்டனர் என்பது தவறு. ஏன் எனில், இதிகாசங்களிலும், மனுசாத்திரங்களிலும் இதற்கான ஆதாரத்தைக் காணமுடியும்''[5] எனும் மு.பாலகிருட்டிணன் எடுத்துரைக்கும் செய்தியின் மூலம் அறியலாம்.*

*பெரும்பாலானச் சமூகங்களில் பின்பற்றப்பட்டு வந்த ''பர்தா'' முறை இசுலாமியச் சமூகத்தின் ஒழுக்கவிதிகளுக்குள் கொண்டு செல்லப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு*

வருகிறது. இசுலாமிய மக்களிடம் வழக்கில் உள்ள இந்த ஆடையானது புர்கா, துப்பட்டி எனும் வேறுபெயர்களாலும் அச்சமூக மக்களால் அழைக்கப்படுகிறது.

இதையே ஆய்வுக்குட்பட்டப் புதினமானது,

"திடீரென்று வெண்ணிற புர்கா பொத்தி தேவதைக் கூட்டம்போல கல்யாணவீட்டுக்குப் போகிற பெண்டுகள்" (து.தொ.ப.47)

எனும் வரிகளினூடாக எடுத்துரைக்கிறது.

புர்காவைப் போன்று உடல்முழுவதும் மறைக்கும் மற்றொரு ஆடையே "துப்பட்டி" எனும் பெயரில் வழங்கப்படுகிறது. "துப்பட்டி" என்பது பத்து மீட்டர் முதல் பன்னிரெண்டு மீட்டர் வரை உள்ள வெள்ளை நிறத்துணியாகும். இதன் இரண்டு பக்கங்களை ஒன்றாக்கித் தைத்துத் தலைப்புப் பகுதியை இடுப்பில் செருகி ஒரு போர்வையைப் போல் தோளில் போர்த்தி கண், மூக்கு நீங்கலாக முகத்தின் ஏனையப் பகுதிகளை மறைத்து பெண்களால் அணிந்து கொள்ளப்படுகிறது. இதனையே, ஆய்வுக்குட்பட்ட மற்றொரு புதினத்தில்,

"அம்மாவும் பெரியம்மாவும் வெள்ளைநிறத் துப்பட்டியினால் தங்கள் உடம்பை முழுவதுமாகச் சுற்றி மூடியிருக்க... முகத்தைக் கண் மட்டும் தெரியும்படி மூடிக்கொண்டு சென்றனர் " (இ.ஜா.க.ப.23)

எனும் வரிகளினூடாகப் புலப்படுத்துகிறது. இதிலிருந்து, பழங்காலத்தில் அணியும் பர்தா முறை "துப்பட்டி" எனும் பெயரில் வழங்கப்படுவதையும் அது வெள்ளை நிறத்தில் மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதையும் அறியமுடிகிறது. மேலும் நவீன காலத்துப் பெண்களிடம் "புர்கா" என்கிற தைத்த ஆடை பல வண்ணங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதும் புலனாகிறது. இன்றும் காயல்பட்டினம், கீழக்கரை போன்ற பகுதிகளில் வாழும் இசுலாமியர்களில் வயோதிகப் பெண்கள் இந்தத் துப்பட்டியைப் பயன்படுத்தி வருகின்றனர் என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது. மேலும் கேரளத்தின் ஆலயக்கலையான கதகளியில் உள்ள ஆடைகள் இசுலாமிய ஆடைகளின் பாணியில் அமைந்தவை. இதில் பங்குபெறும் பாஞ்சாலியும், லட்சுமிதேவியும் இசுலாமிய ஆடையில் தலைக்கு முக்காடு போட்டபடிதான் வருகிறார்கள். மட்டுமன்று இங்கு பல தெய்வங்களுக்கான பட்டு அலங்காரமே இசுலாமியப் பாணியில்தான் செய்யப்படுகிறது. மேலும் இம்மக்கள் மங்கலமான செயல்களை தலையை மறைக்காமல் செய்வதில்லை. இவ்வாறாக கொள்வினை கொடுப்பினைகளால் இசுலாத்தில் ஏற்பட்டுள்ள பண்பாட்டு ஊடாடத்தை அவதானிக்க முடிகிறது.

தாடி

"தாடி" என்பது தூயத் தமிழ்ச்சொல்லாகும். சங்க இலக்கியங்களில் ஒ்னறாகிய கலித்தொகையில் "தாடி" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது உருதுமொழிக்குள் புகுந்து உருதுச்சொல் போன்று வழங்கப்பட்டு வருகிறது. மனித உற்பத்தி துவங்கியதிலிருந்து தாடி வைத்திருப்பது கௌரவத்தின் அடையாளமாகவே கருதப்பட்டு வருகிறது. இசுலாமியச் சமூகத்தைப் பொறுத்தமட்டில் "தாடிவைத்தல்" என்பது ஆண்களுக்கான சமயக் கடமைகளில் ஒன்றாகும். இதுகுறித்து இசுலாமியக் கலைக்களஞ்சியம், "உலகத்தில் தோன்றிய நபிமார்கள் அனைவரும் மீசையை வெட்டி, தாடி வைத்திருந்தார்கள். எனவேதான மீசையை வெட்டுவதும், தாடி வளர்ப்பதும் ஃபித்ரா. அதாவது நபிமார்களின் வழிமுறை என்று கூறப்படுகிறது. எனவே இதனை வைப்பது சுன்னத் ஆகிறது"[6] என்று விளக்கம் தருகிறது.

இதன்கீழ் ஆய்வுக்குட்பட்டப் புதினங்களானது,

"கத்னா-மார்க்கக் கல்யாணம்-செய்யாதவன் எப்டி முஸல்மான் இல்லியோ, அதே மாதிரிதான் தாடி வளர்க்காதவனும் என்பது ஷூக்கூர்பாய் கொள்கை"(அ.பா.தோ.ப.111)

எனும் புதினவரிகளிலும்,

"உசேன் நீ மொதல்ல தாடி வை. அழகாருக்கும். அது சுன்னத்ப்பா. படிச்ச பய நீ. நாம இஸ்லாம்ங்க்றதுக்கான அடையாளம் அது" (அ.பா.தோ.ப.131)

எனும் புதினவரிகளிலும்,

"ஒரு முஸ்லிமா பிறந்திட்டு தாடி வைக்காம இருக்கறது எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா?" (இ.ஜா.க.ப.256)

எனும் வரிகளிலும் எடுத்துரைக்கின்றன.

தொடக்ககால இசுலாமியர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள மீசையை மழித்து அதற்கு மாற்றாக தாடி வளர்த்துள்ளனர். மீசையை எடுக்காதவர்கள் இசுலாமியரல்லர் என்பதானக் கருத்தும் சமூகத்தில் நிலவி வந்துள்ளது. இருப்பினும், கால மாற்றத்திற்கேற்ப இசுலாமியச் சமூக ஆண்கள் மீசை வைப்பதும் தாடி இல்லாமல் இருப்பதும் சமூக ஏற்புடையதாகவே உள்ளது.

தொப்பி

இசுலாமியச் சமய நடைமுறைகளில் ஒன்றாக அச்சமூக ஆண்கள் தலையில் தொப்பி அணியும் வழக்கம் பின்பற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பகுதியிலும் வாழும் இசுலாமியர் அணியும் தொப்பிகளில் வேறுபாடு உள்ளது. காஷ்மீர் பகுதிகளில் நீளமும் அகலமும் கொண்ட தொப்பிகளும், தெலுங்கு மற்றும் மலையாளப் பகுதிகளில் வசிக்கும் இசுலாமியர்கள் தொப்பி அணிவதற்குப் பதிலாக வெள்ளைத்துணியால் உருமால் கட்டுவதையும் அறியமுடிகிறது. மேலும் சென்னை மாநிலத்தின் தென்பகுதியில் நூலால் பிண்ணிய கருப்புத் தொப்பிகள் அணியும் வழக்கம் உள்ளது. இவ்வகைப்பாடுகளைக் கொண்டுள்ளத் தொப்பிகளை இசுலாமியச் சமூக ஆண்கள் சமய வழிபாட்டின்போது மட்டுமல்லாமல் அனைத்து நேரங்களிலும் தலையில் அணியும் வழக்கத்தையும் கொண்டுள்ளனர்.

இதனை ஆய்வுக்குட்பட்டப் புதினமானது,

> ''பாங்கோசை... அல்லாஹ் அக்பர் என்று தொடங்கும்போது தான் அதற்கு எத்தனை ஆயிரம் தொப்பிகளை எத்தனை முக்காடுகளை நெறிப்படுத்துகிற வல்லமை''(து.தொ.ப.47)

எனும் வரிகளில் எடுத்துரைக்கிறது. எனவே இசுலாமியர்கள் நாள்தோறும் ஐந்துவேளை வழிபாட்டை மேற்கொள்வதன் பொருட்டு மசூதியிலிருந்து ஒலி எழுப்பப்படுகிறது. அவ்வாறு எழுப்பப்படும் ஒலிக்கு மரியாதை தருவதன் பொருட்டே இசுலாமியச் சமூக ஆண்களும் பெண்களும் தலையில் தொப்பி, முக்காடு போட்டுக்கொள்வதை அறியமுடிகிறது. இசுலாமியர்கள் இறைத்தூதர் முகம்மதுவின் வழிமுறையைத் தங்களது வாழ்வியல் முறையாகப் பின்பற்றுகின்றனர். இதன் காரணமாகவே இசுலாமியர்களால் இவ்வகை அடையாளங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இருப்பினும் தற்காலத்தில் ''நஜாத்'' எனும் ஏகத்துவத்தைப் புணரமைக்கும் இசுலாமிய அமைப்பானது பெண்கள் 'பர்தா' அணிவதை வலியுறுத்தியும் ஆண்கள் தலையில் தொப்பி அணிவதிலிருந்து விலக்கு அளித்தும் வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முடிவாக

ஒவ்வொரு சமூகத்தாரும் தான் சார்ந்திருக்கும் சமயத்தின் வழிப்பட்ட வாழ்வியலையே முன்னெடுக்கின்றனர். அந்தவகையில் இசுலாமியச் சமயப் பின்புலத்தைக் கொண்டவர்கள் சமய, சமூகப் புறஅடையாளங்களானப் பர்தா, தாடி, தொப்பி உள்ளிட்டவற்றை அணிவதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்


1. க.கைலாசபதி, நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், ப.7
2. தி.சு.நடராசன், தமிழின் பண்பாட்டு வெளிகள், ப.4
3. அ.மார்க்ஸ், இசுலாமியருக்கு எதிரான கட்டுக்கதைகள், ப.18
4. இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், தொ:4, ப.45
5. மு.பாலகிருட்டிணன், கண்ணேறு கழித்தல், ப.266
6. இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், தொ:3, ப.512


********* ********* ********** ********* ********* ********** ********** **********